நாகர்கோவில் தொகுதி திமுக எம்எல்ஏ ஆஸ்டின் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை முன்னாள் எம்பி எம்.சி.பாலன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் ஆஸ்டின் எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர் வக்கீல் மகேஷ், முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) மேரிபிரின்சி, லதா, வக்கீல் ப.சிவராஜ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர்.

பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப்

மேலப்பாளையம் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிப்பு!

மாநகர கிழக்கு பொறுப்பாளர் தினேஷ் பங்கேற்பு!

நெல்லை, மே 23-

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளராக போட்டி யிட்டு 13805 வாக்கு வித்தி யாசத்தில் வெற்றி பெற்ற

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், நேற்று முன்தினம் மேலப் பாளையத்தில் (21.05.2026 -வியாழக்கிழமை) வாக்காளர்களுக்கு நன்றியினை தெரிவித்தார்.

நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் வார்டு வார்டாக சென்று வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளர் களுக்கு தனது நன்றியினை தொடர்ந்து தெரிவித்து வருகிறார். பொது மக்கள் அவருக்கு உற்சாக வர வேற்பு அளித்து வருகின்றனர்.

இந்நிலையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் மேலப்பாளையம் பஜார் திடல் முன்பிருந்து நேற்று முன்தினம் (21 ம் தேதி) வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரச்சாரத்தை துவங்கினார், தொடார்ந்து வார்டு. 47,

வார்டு. 48, ஆகிய பகுதிகளில், வாக்களித்து அமோக வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.அப்போது அவர் பேசியதாவது.கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகன் அவர்களின் நல் ஆசியோடு பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றேன்.

என்னை நீங்கள் 13,805 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தீர்கள். அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து மக்கள் பணி ஆற்றுவேன் கடந்த திராவிட மாடல் ஆட்சியில் பாளையங்கோட்டை தொகுதியில் நிறை வேற்றப்பட்ட சிறப்பு திட்டங்கள், கோடை காலங்களிலும் மின்சாரம் தட்டுப்பாடு இன்றி கிடைப்பதற்கு தரம் உயர்த்தப்பட்ட மின்மாற்றிகள் அமைக்கப்பட்டதையும், தடங்கல் இன்றி குடி தண்ணீர் கிடைப்பதற்காக நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்ததையும் எடுத்துக் கூறி, தொடர்ந்து மக்கள் பணியாற்ற மீண்டும் வாய்ப்பு அளித்ததற்கு நன்றியோடு பணியாற்றுவேன் என்று உறுதி கூறினார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாநகர திமுக பொறுப்பாளர் தினேஷ், எஸ்.டி.பி.ஐ.கட்சியின் மாவட்ட நிர்வாகி சாகுல் ஹமீது உஸ்மானி, மேலப் பாளையம் மேற்கு பகுதி பொறுப்பாளர் துபாய் ஷாகுல் ஹமீது,வட்ட கழக செயலாளர்கள் டி.எஸ். எம்.ஒ.உஸ்மான், காஜா முஹைதீன், சாலி மௌலானா, மாமன்ற உறுப்பினர்கள் ரம்ஜான் அலி, சபி அமீர் பாத்து, ஒன்றிய கவுன்சிலர் காசிம், அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளர் டி.எஸ். எம்.ஒ.பாதுஷா,தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளர் சேக் உஸ்மானி, விவசாய தொழிலாளர் அணி மாநகர துணை அமைப்பாளர் கர்ணன்,நெசவாளாரணி மாநகர துணை அமைப்பாளர் ரகுமான் ஷா, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு பகுதி செயலாளர் மீன் கனி, துணை அமைப்பாளர் இபி. ஜாபர் சாதிக், மாணவரணி பகுதி அமைப்பாளர் அர்ஷத்,கழக மூத்த முன்னோடி அசைனா அப்துல்லா, அப்துல் தானிஷ், தலைமை கழக பேச்சாளர்கள் நெல்லை முத்தையா, சி.பா. ராவணன் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பாளை சட்டமன்றத் தொகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் பெண்கள் முகமலர்ச்சியுடன் வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து தங்கள் பகுதியில் நிறைவேற்ற வேண்டிய அடிப்படை வசதிகளை கோரிக்கைகளாக வழங்கினர். விரைவில் நிறை வேற்றித் தருவதாக நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. உறுதி அளித்தார்.

தென்காசி மாவட்டம்

குற்றாலத்தில் சுற்றுலா துறை சார்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆய்வு!

தென்காசி, மே 23-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சுற்றுலாத் துறை மூலம் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை தென்காசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.பணிகளை விரைந்து முடிக்கும்படி பொறியாளர் கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை கேட்டுக் கொண்டார்.மேலும் மாவட்ட வன அலுவலரை நேரில் சந்தித்து பொதுமக்களை பாதிக்கும் நுழைவு கட்டணத்தை ரத்து செய்ய கோரிக்கை வைத்துள்ளார்.

தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத்தலமான குற்றாலத்தில் மெயின் அருவி மற்றும் ஐந்தருவி பகுதிகளில் சுற்றுலாதுறை மூலம் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக குற்றாலம் மெயின் அருவியில் பழைய பாதுகாப்பு வளைவை அகற்றிவிட்டு புதியதாக பாதுகாப்பு வளைவு அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் பெண்கள் உடை மாற்றும் அறையும் கட்டப்பட்டு வருகிறது. ஐந்தருவி பகுதியில் பெண்கள் உடை மாற்றும் அறை மற்றும் சுற்று சுவர் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை நேற்று முன்தினம் (21 ம் தேதி) தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர். கலை கதிரவன் பார்வையிட்டதுடன், அங்கு பணியில் இருந்த அரசு ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களிடம்,குற்றால சீசன் விரைவில் துவங்க இருப்பதை முன்னிட்டு பணிகளை விரைந்து முடித்து தருமாறு கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து மருத்துவர். கலை கதிரவன் எம்.எல்.ஏ. மாவட்ட வன அலுவலரை நேரில் சந்தித்து பொதுமக்களை பாதிக்கும் நுழைவு கட்டணத்தை ரத்து செய்ய கோரி வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக மரு.கலை கதிரவன் எம்.எல்.ஏ. குற்றாலம் திருக்குற்றால நாத சுவாமி கோவிலில் அனைத்து சன்னதிகளிலும் சுவாமி தரிசனம் செய்து விட்டு அங்கு கும்பாபிஷேக திருப்பணிகளுக்காக கடந்த தி.மு.க ஆட்சியில் 2 கோடியே 76 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்று வரும் திருப்பணிகளையும் பார்வையிட்டார்.

நிகழ்வில் குற்றாம் பேரூர் செயலாளர் சங்கர் என்ற குட்டி, முன்னாள் வழக்கறிஞரணி அமைப்பாளர் வேலுச்சாமி,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், குற்றாலநாத சுவாமி திருக்கோவில் அறங்காவலர் வீரபாண்டியன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் சுரேஷ், இளைஞரணி கனிராஜ், ஒன்றிய பிரதிநிதி குத்தாலிங்கம், மேலகரம் துணை செயலாளர் பூபதி, அனந்த நாராயணன்,செல்வம், ஜிம் ஜெய்சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பாளை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக போட்டியிட்ட நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் வெற்றி பெற்றார். மேலப்பாளையம் பஜார் திடலில் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. வாக்காளர்களுக்கு நன்றி கூறினார். தொடர்ந்து 47,48 வார்டுகளில் வாக்காளர்களுக்கு நன்றியினை தெரிவித்தார்.நிகழ்வில் நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ்,மாவட்ட பிரதிநிதி சாகுல் ஹமீது உஸ்மானி, மேலப்பாளையம் பகுதி பொறுப்பாளர் துபாய் சாகுல்,வட்டச் செயலாளர் டி.எஸ்.எம்.ஒ.உஸ்மான் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி கலைஞர் நூலகத்தில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் மக்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு அவர்களின் அடிப்படை தேவைகளை கேட்டறிந்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள், கழக மூத்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில்

அறிவிக்கப்படாத மின்வெட்டால் மக்கள் அவதி:

த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை முற்றுகையிட்டு போராட்டம்!

சென்னை, மே 23-

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டால் மக்கள் அவதியுற்ற நிலையில் த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அறிவிக்கப்படாத தொடர் மின்வெட்டு மற்றும் நள்ளிரவு நேர மின்தடைகளால் பொதுமக்கள் நரக வேதனையை அனுபவித்து வருகின்றனர்.

மின்சார வாரியத்தின் முறையற்ற திட்டமிடல் மற்றும் த.வெ.க. ஆட்சியின் அலட்சிய போக்கே இந்த நிலைக்கு காரணம் என பொதுமக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. சென்னையில் கடந்த சில வாரங்களாகவே வெயிலின் தாக்கம் உச்சத்தில் உள்ளது. பகல் நேரத்தில் சுட்டெரிக்கும் வெயிலால் மக்கள் வீடுகளுக்குள் முடங்கியிருக்கும் நிலையில், பல மணி நேரம் மின் தடை ஏற்படுத்தப்படுகிறது.

"பராமரிப்புப் பணிகள்" என்ற பெயரில் பகல் முழுதும் மின்சாரத்தை நிறுத்தும் வாரியம், இரவு நேரங்களிலும் திடீர் திடீரென 4 முதல் 5 மணி நேரம் மின்விநியோகத்தை துண்டித்து வருகிறது. இதனால், பகல் முழுவதும் உழைத்துவிட்டு இரவில் நிம்மதியாக தூங்கலாம் என்று நினைக்கும் நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்கள், நள்ளிரவில் மின்சாரமின்றி, புழுக்கத்தில் தூக்கத்தைத் தொலைத்து தவித்து வருகின்றனர்.

குறிப்பாக, குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் முதியவர்கள் இந்த அவசர கால சூழலில் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக, கடந்த இரண்டு நாட்களாக திருவொற்றியூர், தண்டையார்பேட்டை, ராயபுரம், எண்ணூர், வேளச்சேரி, மதுரவாயல், போரூர், அய்யப்பன்தாங்கல் உள்ளிட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் தொடர் மின்வெட்டு ஏற்பட்டன. மின்வாரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டால் பேச மறுப்பதாக மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர். இதில் திருவொற்றியூர் பகுதியில் பொதுமக்கள் நேரடியாக மின்வாரிய நிலையத்திற்கு சென்று முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

இதையறிந்த திருவொற்றியூர் த.வெ.க. எம்.எல்.ஏ செந்தில் குமார் நேரில் வந்தும் ஒரு பயனும் இல்லை. எம்.எல்.ஏ போன் செய்தும் மின்வாரிய உயர் அதிகாரிகள் யாரும் அழைப்பை எடுக்காமல் இருக்க கொதித்தெழுந்த மக்கள் அவரை வார்த்தைகளால் ஷாக் அடைய வைத்தனர். இது ஒருபுறம் நடக்க ராயபுரத்தில் சாலையில் போராட்டத்தில் இறங்கிய மக்களை சமாதானப்படுத்த வந்த எம்.எல்.ஏ ராமுவிடம் இதற்கு தான் த.வெ.க.விற்கு ஓட்டு கேட்டீங்களா.

ஆட்சிக்கு வந்த 10 நாட்கள் கூட ஆகல 5 நாள் கரண்ட் கட் பண்ணீட்டாங்க என கேள்வி கணைகள் அவர் மீது மக்கள் தொடுத்தனர். பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் கோடைகாலத்தில் மின்சார தேவை அதிகரிக்கும் என்பது அரசுக்கும் மின்சார வாரியத்திற்கும் அப்பட்டமாக தெரிந்த விஷயமே. தற்போது ஏசி மற்றும் மின் விசிறிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் மின் சுமை தாங்காமல் மின்மாற்றிகள் வெடிப்பதும், கேபிள்கள் பழுதடைவதும் தொடர்கதையாகி உள்ளது. இது அரசின் கவனக்குறைவு எனவும், மின் தேவையை கணிப்பதில் அரசு தவறி விட்டதாகவும் விமர்சனம் எழுந்துள்ளன.

இந்த தொடர் மின் வெட்டு காரணமாக சிறு, குறு தொழில்கள், கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மின்சாரத்தை மட்டுமே நம்பியிருக்கும் தையல் கடைகள், மாவு மில்கள், கணினி மையங்கள் போன்றவற்றின் அன்றாட வருமானம் முடங்கியுள்ளது. வணிகர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வருகின்றனர். தலைநகரிலேயே இந்த அவல நிலை என்றால், மற்ற மாவட்டங்களின் நிலைமையைச் சொல்லவே வேண்டியதில்லை.

ஆட்சிக்கு வந்தவுடன் 200 யூனிட் இலவசம் என அறிவித்த விஜய். முதலில் மின்சாரத்தை பயன்படுத்தினால் தானே சலுகை கூட பெறமுடியும் அந்த மின்சாரத்தை நுகர்வோருக்கு கொடுக்கமல் இருப்பது எந்த வகையில் நியாயம் என சமூகவலைதளத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. ரீல்ஸ் மோகத்தில் மூழ்கி கிடக்கும் இந்த ஆட்சி அதில் கொடுக்கும் முக்கியத்துவத்தை, மக்களின் அடிப்படை தேவையான தடையில்லா மின்சாரம் வழங்குவதில் அரசு காட்ட வேண்டும் என்பதே ஒட்டுமொத்த சென்னை மக்களின் கோரிக்கையாகவும், கண்டனமாகவும் உள்ளது.

மின்வெட்டை கண்டித்து மக்கள் முற்றுகை:

வண்ணாரப்பேட்டை காளிங்கராயன் தெருவில் நேற்று முன்தினம் பகல் முழுவதும் மின்சாரம் இல்லாமல் பொமக்கள் கடும் அவதிக்குள்ளாயினர். இரவு நேரம் மின்சாரம் வந்துவிடும் என்று எதிர்பார்த்த பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்தனர். இதனால் ஆத்திரமடைந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிமெட்டி சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

இதுகுறித்து தகவல் அறிந்த வண்ணாரப்பேட்டை காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்களிடம் சமரசம் பேசினர். சம்பவ இடத்திற்கு வந்த ராயபுரம் எம்எல்ஏ தாமுவை பொதுமக்கள் சூழ்ந்து கொண்டு உடனடியாக மின்சாரம் வழங்க வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மேடவாக்கத்தில் 16 மணி நேரம் மின்சாரம் துண்டிப்பு!

மேடவாக்கம் ஊராட்சிக்குட்பட்ட, பெல் நகரில் ஐந்து தெருக்கள் உள்ளன. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இங்கு கடந்த இரண்டு நாட்களாக மின் தடை ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் காற்றோட்டம் இல்லாமல் தூங்க முடியாமல் அவதிக்குள்ளாகி இருப்பதாக கூறுகின்றனர். இது குறித்து அப்பகுதிவாசிகள் கூறியதாவது: மின்வாரிய அலுவலகத்திற்கு போன் செய்தால் அவர்கள் போன் எடுத்து பதில் சொல்வதில்லை.

கடந்த 16 மணி நேரத்திற்கு மேலாக மின்சாரம் இல்லாமல் அவதிப்பட்டு வருகிறோம். கோடை காலம் என்பதால் தற்போது மின்சாரம் இல்லாமல் இருப்பது மிகவும் சிரமமாக உள்ளது. குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியவர்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டனர். இது மாதிரி அலட்சிய போக்கை கைவிட்டு பொதுமக்கள் நலன் கருதி மின்வாரிய ஊழியர்கள் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தமிழ்நாட்டில்

மாநிலங்களவை இடத்துக்கான இடைத்தேர்தல்!

ஜூன் 18 அன்று நடைபெறுகிறது!

புதுடெல்லி, மே 23-

தமிழ்நாட்டில் காலியாக உள்ள ஒரு மாநிலங்களவை இடத்துக்கான இடைத்தேர்தல் ஜூன் 18 ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அதிமுகவின் சி.வி.சண்முகம், தனது மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்தார். இந்த நிலையில், காலியானதாக அறிவிக்கப்பட்ட தமிழ்நாட்டின் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கு ஜூன் 18 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஜூன் 1 ஆம் தேதி வேட்புமனுத் தாக்கல் தொடங்குகிறது. ஜூன் 11 வேட்புமனுவை திரும்பப் பெற கடைசி நாளாகும். ஒருவருக்கு மேல் போட்டியிடும் பட்சத்தில், ஜூன் 18 ஆம் தேதி வாக்குப்பதிவு நடத்தப்பட்டு, அன்று மாலையே முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 10 மாநிலங்களில் காலியாகும் 24 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தலும் ஜூன் 18 ஆம் தேதி நடைபெறுகிறது.

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சுற்றுலாத்துறை மூலம் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் குற்றாலம் பேரூர் செயலாளர் சங்கர் என்ற குட்டி, முன்னாள் மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் வேலுச்சாமி,வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், குற்றாலம் கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் வீரபாண்டியன் உள்பட பலர் உள்ளனர்.